**தென்கரைபேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர். திரு.இரா.குணாளன்

நக.எண். 25/2025

நாள். 25.06.2025

பொருள் : மனைப்பிரிவு – தேனிமாவட்டம் - தென்கரை பேரூராட்சி - தென்கரை கிராமம் பிட்-1 நிலஅளவை எண்கள். 254/2A10 , மற்றும் 254/2B1இல் திட்டமில்லா பகுதியில் 758ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை :

1. தேனி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அவர்களது நடவடிக்கைகள் நக.எண்.THENI/N4MFZAD2/2025/TCP நாள்.15.05.2025.

2. தென்கரை பேரூராட்சி செயல் அலுவலரின் கட்டணம் செலுத்திடக்கோரும் குறிப்பாணை நக.எண்.25/2025 நாள்.25.06.2025

4. ஜெயம் விஜயம் எண்டர்பிரைஸ் தேனி மாவட்டம் என்பவரது கடிதம் நாள்.04.06.2025

5. தொடர்புடைய ஆவணங்கள்

*****

**ஆணை :-**

தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1-இல் காணும் நடவடிக்கைகள் நக.எண். THENI/N4MFZAD2/2025/TCP நாள்.15.05.2025இன் படியான தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில், தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சி, தென்கரை கிராமம் பிட்-1 நில அளவை எண்கள். 254/2A10 , மற்றும் 254/2B1 இடப்பகுதியில் 758 ச.மீ (18.73 சென்ட்)பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்திட தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 2 மற்றும் 3 ல் காணும் கடிதங்கள் வாயிலாக உரிய கட்டணம் செலுத்தக்கோரி தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து பார்வை 4 ன் படி மனுதாரரால் உரிய கட்டணங்கள் ரூ.197761/- (கீழ்கண்ட விவரப்படி)ஆனது வரைவோலையாக வழங்கப்பட்டதனை தொடர்ந்து

| வ. எண் | கட்டண விபரம் | தொகை | செலுத்து சீட்டு விவரம் |
|---|---|---|---|
| 1 | கூர்ந்தாய்வுக் கட்டணம் | 10000 | /2025-2026 நாள். |
| 2 | நிலப்பயன்பாட்டு மாற்றக் கட்டணம் 8156.08 சதுர அடிக்கு தொகை ரூ. 200 வீதம் தொகை ரூ.1631216 இக்கு 3 சதவீதம் | 48937 | |
| 3 | மனைப்பிரிவு கூர்ந்தாய்வு கட்டணம் பிளாட்1 க்கு 1000 வீதம் 4 இக்கு | 4000 | |
| 4 | காலியிடக் கட்டணம் 8156.08 * 0.80* 13(மொத்தம்) | 84823 | |
| 5 | அபிவிருத்தி கட்டணம் | 50000 | |
| | மொத்தம் | 197760 | |

தென்கரை பேரூராட்சி, தென்கரை கிராமம் பிட்-1 நில அளவை எண்கள். 254/2A10 , மற்றும் 254/2B1 உள்ள இடப்பகுதியில் 758ச.மீ(18.73 சென்ட்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு, தேனி நகர் ஊரமைப்புதுறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி L.P/AD DTCP(TD) NO:SWP/75/2025 என எண்ணிடப்பட்டு 4 மனைக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன் படிகீழ்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி செயல் அலுவலர், தென்கரை பேரூராட்சியால் இரத்து செய்யப்படும்.
2. எந்ததுறைக்காகவும் நில ஆக்கிரமிப்பு பட்டியலில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட மேற்படி இடம் தேர்வு செய்யப்பட்டிருப்பின் இவ்விறுதி ஒப்புதல் பொருந்தாது.
3. மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு உரிமையாளர்/ மனைப்பிரிவு விண்ணப்பதாரரைச் சாரும்.

4. பிரஸ்தாப புலத்தினை சுற்றியுள்ள பாசன நிலங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்ப்படுத்தக் கூடாது.

5. நீர்வழி பாதையினை தடுக்கும் வகையில் எவ்வித அபிவிருத்திகளும் மேற்கொள்ள கூடாது.

6. கழிவு பொருட்கள் மற்றும் கழிவு நீரை பாசன நிலங்களின் கரையிலோ உட்பகுதியிலோ கொட்டுதல் கூடாது.

7. கட்டணத்தில் மாற்றம் அல்லது குறைவாக வசூல் செய்யப்பட்டதாக உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினாலோ/அரசினாலோ/நகர் ஊரமைப்பு துறையினாலோ தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவற்றை பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்த 7 தினங்களுக்குள் மனைப்பிரிவு உரிமையாளர்/ விண்ணப்பதாரர் செலுத்திட வேண்டும்.

8. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்றுச்சுவர் எழுப்புதல் கூடாது.

9. மனுதாரர் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடங்களினை விற்பனை செய்தல் கூடாது.

10. தென்கரை பேரூராட்சி மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மேலும் மேற்படி இடங்களை சட்ட விரோதமாக விற்பனையோ மற்றும் கட்டுமான பணிகளோ மேற்கொள்ளுதல் கூடாது. இந்நிபந்தனையினை மீறும்பட்சத்தில் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி செயல் அலுவலர், தென்கரை பேரூராட்சியால் ரத்து செய்யப்படும்.

11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'4 என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

12. அரசு பிறப்பிக்கும் புதிய நிபந்தனைகள்/ உத்தரவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
தென்கரை பேரூராட்சி
தேனிமாவட்டம்.

**பெறுநர்:-**

ஜெயம் விஜயம் எண்டர்பிரைஸ்,

தேனி மாவட்டம்

**நகல் :-**

1. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. பெரியகுளம் வட்டாச்சியர், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. சார்பதிவாளர், பெரியகுளம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.